<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 543/2023 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | மூர்த்தி |
| **Father/Husband' Name** | ~ | குருசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 09.07.2026.**</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பொழிச்சலூரில் குடியிருந்து மீன் வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரர் நாகராஜன் என்னுடைய உறவினராவார். 15 வருடங்களுக்கு முன்பாக நான் பொழிச்சலூரில் இருந்து ஆஜர் எதிரிகளுக்கும் மூர்த்தி என்பவருக்கும் இடையே சண்டை நடப்பதை பார்ப்பதற்கு பல்லாவரம் மெயின் ரோடிலுள்ள முருகன் என்பவரின் காயலான் கடைக்கு சென்றிருந்தேன். ஊரிலிருந்தவர்கள் சண்டை நடைபெற்றதாக சொன்னார்கள். அதனை பார்ப்பதற்காக நான் சாயங்காலமாக சென்றிருந்தேன். நாகராஜ் என்பவரை சாயங்காலம் அவரது கடையில் வைத்து பார்த்தேன். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. வழக்கு சம்பந்தமாக வேறு ஏதும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக ஏதும் தெரியாது என்றால் சரிதான். எதிரி மூர்த்தி என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது என்றால் அதனை நான் பார்க்கவில்லை.

**குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct
**S/d. C.P. Mullai Vanan**
District Munsif–cum Judicial Magistrate,
Pallavaram

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 543/2023 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | முருகன் |
| **Father/Husband' Name** | ~ | ராமு |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 09.07.2026.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பொழிச்சலூரில் குடியிருந்து பல்லாவரத்தில் இரும்பு கடை நடத்தி வருகிறேன். புகார்தாரர் நாகராஜன் என்னுடைய அண்ணனாவார். அவர் தற்போது இறந்துவிட்டார். கடந்த 2013 ஆம் ஆண்டு 9 வது மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. பல்லாவரம் ஓல்ட் டிரங்க் ரோடில் நான் இரும்பு கடை நடத்தி வந்தேன். அந்த கடையில் என்னுடைய அண்ணனை விட்டுவிட்டு நான் சென்றிருந்தேன். நான் எனது அண்ணனை வந்து பார்த்தபோது அவருக்கு இரத்தம் வந்திருந்தது. அவரை கேட்டபோது எதிரிகள் மூர்த்தி, மாயவன், பாலமுருகன், சரவணன் ஆகியோர் வெளியூரில் இருந்து இங்கு வந்து கடை வைத்து நடத்துகிறாயா என்று அசிங்கமாக பேசி உருட்டு கட்டையால் அடித்ததாக என்னிடம் சொன்னார். நான் உடனே எனது அண்ணனை குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் எனது கடைக்கு வந்தபோது என்னை பார்த்தவுடன் சண்டை போட்டு கொண்டிருந்த எதிரிகள் ஓடி விட்டார்கள். என்னுடைய அண்ணன் நாகராஜன் பல்லாவரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் எனது அண்ணன் நாகராஜன் என்பவருடையது. புகாரை எனது அண்ணன்தான் எழுதினார். புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கின் எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் இல்லை. என்ன கடை வைத்துள்ளீர் என்றால் இரும்பு கடை வைத்துள்ளேன். இரும்பு கடை நடத்துவதற்கு உரிமம் வாங்கி உள்ளேனா என்றால் வாங்கி உள்ளேன். எந்த விலாசத்தில் இரும்பு கடை நடத்தி வருகிறீர்கள் என்றால் பல்லாவரம் பழைய டிராங்க் ரோடு எண் 24 என்ற விலாசத்தில் இரும்பு கடை நடத்தி வருகிறேன். அந்த கடையை நான் வாடகைக்கு எடுத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எவ்வளவு காலமாக அந்த கடையை நடத்தி வருகிறீர்கள் என்றால் 2011ம் ஆண்டு முதல் நடத்தி வருகிறேன். எனது மீது எத்தனை வழக்குகள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஒரே ஒரு வழக்கு உள்ளது. எந்த நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் தாம்பரம் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. அந்த வழக்கின் எண் தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் எண் தெரியவில்லை. என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கொலை முயற்சி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் இவ்வழக்கில் ஒன்றாவது எதிரி மூர்த்தி என்பவரை அடித்து அவருக்கு தலையில் பெரிய காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.இவ்வழக்கின் புகார் கொடுக்கும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன்.எந்த மருத்துவமனைக்கு எனது அண்ணனை அழைத்து சென்றீர்கள் என்றால் இரவு 9 மணிக்கு குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால் வந்தார்கள்.

2. இவ்வழக்கில் கொடுக்கப்பட்ட புகாரில் கையொப்பம் செய்துள்ள எனது அண்ணனின் கையப்பமும் புகாரில் உள்ள சங்கதிகளின் எழுத்துகளும் வெவ்வேறாக உள்ளது என்றால் எனது அண்ணனின் வழக்கறிஞர் உடனிருந்து அந்த புகாரை எழுதி

கொடுத்திருப்பார்.புகாரில் உள்ள கையொப்பம் எனது அண்ணன் நாகராஜ் என்பவருடைய கையொப்பம் கிடையாது என்றால் சரியல்ல அது அவருடைய கையொப்பம் தான் அவருக்கு போதிய கல்வி அறிவு இல்லாததால் அவ்வாறு கையொப்பம் செய்துள்ளார். புகாரில் உள்ள கையொப்பம் எனது அண்ணனுடைய கையொப்பம் என எடுத்துரைக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எதிரிகள் இவ்வழக்கின் எதிரிகள் எனது அண்ணனை அடித்ததை பார்த்தீர்களா என்றால் நான் தான் பார்த்தேன். நான் சொல்வது போல் எதிரிகள் அடித்ததை நான் பார்க்கவில்லை என்றாலும் அவர்கள் ஓடிய போது தான் நான் அவர்களை பார்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. உருட்டு கட்டையை வைத்து அடித்ததாக சொல்கிறீர்களா என்றால் ஆமாம். அந்த உருட்டு கட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் காவல் ஆய்வாளரிடம் அந்த உருட்டுகட்டையை ஒப்படைத்து விட்டோம். இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நேரத்தில் நான் இவ்வழக்கின் ஒன்றாவது எதிரி மூர்த்தி என்பவரை தாக்கியதால் நான் அப்போது காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தேன் என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன் என்னை பார்த்தவுடன் எதிரிகள் ஓடி விட்டார்கள். வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரத்தில் நான் காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தேன் என்றால் நான் மருத்துவமனைக்கு சென்று விட்டு இரண்டு மணி நேரம் கழித்துதான் காவல் நிலையத்திற்கு சென்றேன். ஒன்றாவது எதிரியை தாக்கியது தொடர்பாக நான் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டிருந்தேன் என்றால் இல்லை( சாட்சி பின்னிட்டு நான் அந்த தடுப்புச் சட்டத்தில் மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து அதிலிருந்து வெளியே வந்து விட்டதாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார்). குறிப்பாக எந்த எதிரி எனது அண்ணனை அடித்ததை பார்த்ததாக சொல்கிறீர்கள் என்றால் மூர்த்தி, மாயவன், பாலா, சரவணன் ஆகியோர் அடித்தார்கள்.

4. எதிரிகள் யாரும் இவ்வாளுக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் நான் தான் மாயவன் என்பவரின் இரு சக்கர வாகனத்தை தொழில் போட்டி காரணமாக பிடுங்கி வைத்துக் கொண்டு அதனை ஒன்றாக எதிரி மூர்த்தி என்னிடம் சென்று கேட்க வந்தபோது நான் தான் மூர்த்தி என்பவரை அடித்து தலையில் பலத்த காயம் ஏற்படுத்தி உள்ளேன் என்றால் இல்லை.மாயவன் பாலா சரவணன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும் என் மீது மூர்த்தி என்பவர் கொடுத்த புகாரில் பதிவு செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக தவறாக மாயவன் பாலமுருகன் சரவணன் ஆகியவர்கள் மீது எனது அண்ணனை வைத்து பொய்யாக புகார் மனு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. மூர்த்தி என்பவருக்கும் இவ்வழக்கில் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றாலும் இவ்வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரத்தில் மூர்த்தி என்பவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தார் என்றாலும் சரியல்ல அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif–cum Judicial Magistrate,
Pallavaram

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 543/2023 |
| Prosecution: | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | கருப்பையா |
| **Father/Husband' Name** | ~ | ராமு |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 09.07.2026.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பொழிச்சலூரில் குடியிருந்து காயலாங்கடை நடத்தி வருகிறேன். புகார்தாரர் நாகராஜன் எனது அண்ணனாவார். அ.சா.2 முருகன் என்னுடைய தம்பி ஆவார். கடந்த 03.09.2013 ஆம் தேதி என்னுடைய அண்ணன் நாகராஜன் , என்னுடைய தம்பி முருகனின் கடையான ஜிஎஸ்டி சாலை பல்லாவரத்தில் உள்ள காயலாங்கடையில் இருந்தார். ஆஜர் எதிரிகள் மூர்த்தி, மாயவன், பாலா, சரவணன் ஆகியோர்கள் என்னுடைய அண்ணன் நாகராஜனை 3 அடி நீளமுள்ள சவுக்கு கட்டையால் அடித்துவிட்டார்கள். என்னுடைய அண்ணனின் இடதுபக்க மண்டை உடைந்துவிட்டது. என்னுடைய அண்ணன் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மறுநாள் 04.09.2013 ஆம் தேதி எதிரி பாலமுருகன் 3 அடி நீளமுள்ள 2 சவுக்கு கட்டைகளை எடுத்து போலீசாரிடம் என்னுடைய தம்பியின் கடையின் அருகில் இருந்து ஒப்படைத்தார்.அதற்கு போலீசார் என்னை சாட்சியாக இருக்க கேட்டுகொண்டதன்பேரில் நான் சாட்சியாக இருந்து கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக கையொப்பமிட்டேன்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 2 ஆகவும், சுமார் 3 அடி நீளமுள்ள 2 சவுக்கு கட்டைகள் அ.சா.பொ. 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எங்கு கடை நடத்தி வருகிறீர்கள் என்றால் பம்மலில் கடை நடத்தி வருகிறேன். வழக்கு சம்பவம் நடைபெற்ற விபரம் எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் இரவு 9 மணிக்கு தெரிய வந்தது. அதன்பின் தான் நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். எதிரிகள் கட்டையில் அடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் மறுநாள் காலையில் போலீசார் காட்டிய போது தான் பார்த்தேன். எந்த இடத்தில் வைத்து கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேன்.இவ் வழக்கில் காயம் பட்ட நாகராஜ் மற்றும் முருகன் ஆகியோர் எனது உடன்பிறந்த அண்ணன் தம்பி என்றால் சரிதான்.கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துள்ள கதிர்வேல் என்பவர் யார் என்றால் அவர் எனது பெரியம்மா மகன் அவர். எனது பெயரில் குற்ற வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. ஒன்றாவது எதிரி மூர்த்தி என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான் மூர்த்தி என்பவருக்கும் எனது அண்ணன் நாகராஜ் என்பவருக்கும் இருவருக்கும் தான் காயம் ஏற்பட்டிருந்தது. யார் அடித்து காயம் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.இவ் வழக்கில் அடித்ததாக சொல்லப்படும் கட்டையானது சவுக்கு கட்டையா அல்லது ரீப்பர் கட்டையா என்றால் சவுக்கு கட்டை தான்.நான் முதல் விசாரணையில் ரீப்பர் கட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மருத்துவமனைக்கு எனது அண்ணன் நாகராஜ் என்பவரை அழைத்துக் கொண்டு சென்றீர்களா என்றால் இல்லை. எனது தம்பி முருகன் என்பவர் இவ்வழக்கின் ஒன்றாவது எதிரி மூர்த்தி என்பவரை அடித்து காயம் ஏற்படுத்திய தொடர்பாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. அவர் மீது இவ் வழக்கில் எனது தம்பி முருகன் என்பவர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் காவலில் அடைக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான் அதன் பின்னிட்டு அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு விட்டது. பொதுவாக ஒரு நபருக்கு எதிராக ஒரு வழக்கு இருக்கும் பட்சத்தில் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட மாட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தம்பி முருகன் என்பவர் மீது எத்தனை குற்ற வழக்குகள் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது.எதிரிகளுக்கு எதிராக தவறாக வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.எனது தம்பி முருகன் மூர்த்தி என்பவரின் மகனின் வாகனத்தை பிடுங்கி வைத்துக் கொண்டதால் அதனை கேட்பதற்காக ஒன்றாவது எதிரி சென்றபோது எனது தம்பி முருகன் என்பவர்தான் தாக்கினார் என்றால் இல்லை இரண்டு நபர்களும் குடிபோதையில் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டார்கள்.எனது தம்பிக்கு ஆதரவாக வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ் வழக்கின் எதிரிகள் எனது உறவினர்களா என்றால் இல்லை சரவணன் எனது ஊர்க்காரர் இதனை எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள். தொழில் போட்டி காரணமாக எனது தம்பிக்கும் மூர்த்தி என்பதற்கு பிரச்சனை ஏற்பட்டதா என்றால் ஆமாம். இவ் வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக எதிரிகளுக்கு எதிராக எவ்வித குற்ற வழக்குகளும் பதிவாகவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தம்பி முருகன் என்பவருக்கு இவ்வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாகவே பல குற்ற வழக்குகள் பதிவாகி இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தம்பிக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிவுற்றது.**
**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**
District Munsif–cum Judicial Magistrate,
Pallavaram